நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை:-**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.233/2021

**CNR No.TNMD14 - 001245 - 2021**

*****

அரசுக்காக ஆய்வாளர்,
திருமங்கலம் தாலுகா காவல் நிலைய
குற்ற எண்.156/2019
சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC .... குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

ரமேஷ் (வயது 42/2019),
த/பெ.கனகராஜ்,
வடக்கு தெரு, ஜமீன்நத்தம்பட்டி,
ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். ... குற்றம் சாட்டப்பட்டவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.233/2021** | | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | | திருமங்கலம் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.156/2019 |
| | **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | |
| 3. | எதிரியின் பெயர் | : | ரமேஷ் |
| 4. | எதிரியின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | கனகராஜ் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | எதிரியின் முகவரி | : | வடக்கு தெரு, ஜமீன்நத்தம்பட்டி, ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். |
| 7. | எதிரியின் வயது | : | 42/2019 |
| | **தேதி விபரங்கள்** | | |
| 8. | சம்பவம் | : | 08.07.2019 |
| 9. | புகார் | : | 08.07.2019 |
| 10. | கைது தேதி | : | 10.07.2019 |

| | | | |
|---|---|---|---|
| 11. | **பிணை விடுப்பு** | : | Station bail |
| 12. | Committal | : | -- |
| 13. | **விசாரணை துவக்கம்** | : | 23.02.2026 |
| 14 | **விசாரணை முடிவு** | : | 12.03.2026 |
| 15. | **தண்டணை (அ) ஆணை** | : | **குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது.** |
| 16. | **தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிக்கு சார்பு செய்தல்** | : | |
| 17. | Period of Remand of the accused | : | - |
| 18. | Date of filing of the final report | : | 26.11.2021 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 28.07.2022 |
| 20. | Miscellaneous petition and their results | : | - |
| 21. | Date of examination in chief and cross | : | <table><tr><th>PW's</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>1.</td><td>23.02.2026</td><td>23.02.2026</td></tr><tr><td>2.</td><td>23.02.2026</td><td>23.02.2026</td></tr><tr><td>3.</td><td>23.02.2026</td><td>23.02.2026</td></tr><tr><td>4.</td><td>09.03.2026</td><td>09.03.2026</td></tr></table> |
| 22. | Date of examination accused U/s.313 Crpc | : | 12.03.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | **காலதாமத்திற்கான காரணம்: சாட்சிகளை உரிய தேதியில் ஆஜர்படுத்தாததால் காலதாமதம்** | | |

இவ்வழக்கானது 26.11.2021ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை –2, ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.கேசவன் அவர்கள் ஆஜராகி இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு 12.03.2026ம்

தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்.

## தீர்ப்புரை

கடந்த 08.07.2019ம் தேதி மாலை சுமார் 04.45 மணியளவில் வாதி மற்றும் சாட்சிகள் ஆலம்பட்டி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த வாதியின் கணவர் அவர்களை பார்க்க வேண்டி தனக்கு சொந்தமான TN 58 AT 5539 TVS XL 100 வண்டியில் ஜெயராணி டீ கடை அருகே ராஜபாளையம் திருமங்கலம் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக வந்து கொண்டிருந்த போது ரோட்டில் அதே திசையில் வாதியின் கணவருக்கு பின்னால் வந்த எதிரி TN 67 N 0866 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வாதியின் கணவர் ஓட்டிய டுவீலரில் மோதி வாதியின் கணவருக்கு நெற்றியிலும் தலையிலும் பலத்த ரத்தகாயத்தை ஏற்படுத்தி சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளதாக கூறி எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டு குற்றம் குறித்து வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையுள்ள சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 திருமதி.சுப்புத்தாய் மற்றும் சம்பவ சாட்சியான அ.சா.2 திருமதி.அமுதா ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் சுமார் 6 வருடத்திற்கு முன்பாக தாங்கள் ஆலம்பட்டியில் அ.சா.1ன் வீட்டில் இருக்கும் போது சில நபர்கள் தங்களுக்கு போன் மூலம் தகவல் சொல்லி

அ.சா.1ன் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னதாகவும், தாங்கள் உடனடியாக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், அ.சா.1ன் கணவர் பிணவறையில் வைக்கப்பட்டிருந்ததாகவும், இது சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்ததாகவும், அந்த புகார் அ.சா.1 விபரம் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள் என்றும், எப்படி விபத்து நடந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும், எதிரியை தங்களுக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

5. இவ்வழக்கின் சம்பவ சாட்சியான அ.சா.3 திரு.பூபாண்டி தனது சாட்சியத்தில் சுமார் 6 வருடத்திற்கு முன்பாக தான் ஆலம்பட்டியில் கல்குவாரியில் வேலை செய்து கொண்டிருந்த போது தனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்து அ.சா.1 மற்றும் 2ஐ கூட்டி கொண்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாகவும், தனது அண்ணனை பிணவறையில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அங்கு விசாரித்த போது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டதாகவும், எதிரியை தனக்கு தெரியாது என்றும் விபத்து ஏற்படுத்திய ஓட்டுனரை தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான அ.சா.4 திருமதி.சுவிதா திருமங்கலம் தாலுகா காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தான் இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.சிவசக்தி ஆகியோர்களின் கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்றும் அவர்கள் பணிமாறுதலாகி வேறு மாவட்டத்திறகு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 08.07.2019ம் தேதி 21.00 மணியளவில் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் நிலைய பொறுப்பில் பணியிலிருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.156/2019 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் படி வழக்கு பதிவு செய்ததாகவும் அந்த அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும் அதன்பின்பு வழக்கை காவல் ஆய்வாளர் சிவசக்தி புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 09.07.2019ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில்

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 என்றும் மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவுசெய்ததாகவும், பின்பு அன்றைய தினமே திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைக்கபட்டிருந்த இறந்த நபரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்வதற்காக பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 என்றும், மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியதாகவும், எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி 10.07.2019ம் தேதி 10.30 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்ததாகவும், சம்பந்தப்பட்ட வாகனங்களை வாகன தணிக்கைக்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்ததாகவும், பின்பு இறந்த நபருக்கு பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அந்த பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.6 என்றும், பின்பு மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரணை செய்து சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அந்த வாகன தணிக்கை சான்றுகள் அ.சா.ஆ.7 மற்றும் 8 என்றும், அதன் பின்பு இந்த வழக்கில் தனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் முடித்துக்கொள்ளப்பட்டு எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)படி வினவியபோது எதிரி சாட்சியை " பொய் சாட்சி " எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனச் சொன்னார். எதிரி தரப்பில் சான்று பொருளும் குறியீடு செய்யப்படவில்லை.

8. இங்கு தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் போதுமான மற்றும் தெளிவான சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

9. இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக எந்தவொரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை. இவ்வழக்கில் சம்பவம் குறித்து கேள்விபட்டதாக அ.சா.1 முதல் அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். சம்பவம் குறித்து கேள்விபட்ட சாட்சிகள் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாக மட்டும் தான் சாட்சியம் அளித்துள்ளார்களே தவிர யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. அதை உறுதிபடுத்தும் விதம் அ.சா.1 முதல் 3 வரையுள்ளவர்கள் அவர்களது குறுக்கு விசாரணையில் இறந்தவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி தங்களுக்கு தெரியாது என்றும், எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும் சம்பவத்தை தாங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சங்கதிகளை வைத்து பார்கையில் சம்பவத்தை நேரில் பார்த்து ஆஜர் எதிரி தான் சம்பவத்தின் போது அரசு பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என எந்தவொரு சம்பவ சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. இவை அனைத்தும் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது நீதியின் நலுனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. முடிவில், எதிரி சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி ஏற்கனவே எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்தரவிடப்படுகிறது.

11. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 13.03.2026 அன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**பின்னிணைப்பு:-**

**1.அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | : | திருமதி.சுப்புத்தாய் |
| அ.சா.2 | : | திருமதி.அமுதா |
| அ.சா.3 | : | திரு.பூபாண்டி |
| அ.சா.4 | : | திருமதி.சுவிதா – சிறப்பு சார்பு ஆய்வாளர் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. | 08.07.2019 | புகார் மனு |
| 2. | 08.07.2019 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | 09.07.2019 | பார்வை மகசர் |
| 4. | 09.07.2019 | மாதிரி வரைபடம் |
| 5. | 09.07.2019 | பிரேத விசாரணை அறிக்கை |
| 6. | 09.07.2019 | பிரேத பரிசோதனை சான்று |
| 7. | 24.07.2019 | TN 58 AT 5539 மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 8. | 10.07.2019 | TN 67 N 0866 மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

3. **அரசு தரப்பு சான்றுப் பொருள்**: இல்லை

4. **எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை**

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.

**நகல்:**

மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.03.13 15:51:00 +0530

நீதித்துறை நடுவர்,

திருமங்கலம்.